DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.26**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | டாக்டர்.ரிஸ்வான் அகமது (மருத்துவர் சீருடையில் ஆஜராகவில்லை) |
| Father Name | : | அகமது இப்ராகிம் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2025.

( 2, 3 எதிரிகள் ஆஜர். 1 எதிரி ஆஜர் இல்லை. 1 வது எதிரி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. A7 ஆஜர்படுத்தப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>**

நான் தற்போது சென்னையிலுள்ள கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர்சிகிச்சை மருத்துவமனையில் உதவி பேராசிரியர் முடநீக்கவியல் துறையில் மருத்துவராக பணிபுரிகிறேன். நான் மதுரை அப்போலோ மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக இருந்த போது, ராமகிருஷ்ணன் என்பவரை சிகிச்சைக்காக கத்தி குத்து காயங்களுடன் அழைத்து வந்தனர். அவர் என்னிடம் தன்னை ஒரு நபர் கூர்மையான பொருளால் குத்தியதாக சொன்னார். அவருக்கு இடது பக்க கை, இடது பக்க முழங்கை, இடது கால், இடது பக்க மார்பக பகுதி, வலது பக்க உள்ளங்கை, வயிற்று பகுதி ஆகிய இடங்களில் கத்தி குத்துகளால் ஏற்றப்பட்ட காயங்கள் ஏற்பட்டன. அவருக்கு முதல் உதவி சிகிச்சை செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். நான் வழங்கிய காயச்சான்று **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

அப்போலோ மருத்துவமனை தனியார் மருத்துவமனையாகும். தனியார் மருத்துவமனைகளில் சட்டம் சார்ந்த வழக்குகளில் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை கொடுக்க வேண்மென்றால் அதற்கு தனி சிறப்புரிமை இருக்க வேண்டும் என்றால் சரிதான். மேற்படி அப்போலோ மருத்துவமனைக்கு அந்த உரிமம் உள்ளது. அவ்வாறு உரிமம் வழங்கும் போது, என்னென்ன ஆவணங்கள் தயார் செய்ய வேண்டும், அதனை யாருக்கு அனுப்ப வேண்டும். அந்த ஆவணங்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் வந்தவுடன் அவருக்கு விபத்து பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டது. அவ்வாறு சிகிச்சை வழங்கிய பின்பு அந்த நபர் வார்டு அனுப்பி வைக்கப்படுவார் என்றால், சரிதான். மேலும் வார்டில் அவருக்கு சிகிச்சை வழங்கப்படும் அந்த சிகிச்சை சம்மந்தப்பட்ட கேஸ் சீட் உள்ளது. மேற்படி நபரை சிகிச்சை முடிந்து விடுவிக்கும்போது அவருக்கு டிஸ்சார்ஜ் சம்மரி வழங்கப்படும். நான் அன்றைய தினத்தில் விபத்து சிகிச்சை பிரிவில் பணி மருத்துவராக இருந்தேன். நான் ராமகிருஷ்ணனை 22.11.2015 ம் தேதி பார்த்தேன். மேற்படி ராமகிருஷ்ணனை சிகிச்சைக்கு அனுமதிக்கும் போது விபத்து பதிவேடு தயார் செய்யப்பட்டது. விபத்து பதிவேடு புத்த வடிவில் இருக்கும். அதில் ஒரு அசல் மற்றும் இரண்டு நகல்கள் இருக்கும். அந்த நகல்கள் கார்பன் வைத்து எழுதப்படும். அந்த விபத்து பதிவேட்டில் வழக்கின் சுருக்கம் எழுதப்படும். அந்த வழக்கின் சுருக்கத்தில் காயம்பட்ட நபர் எங்கிருந்து கொண்டு வரப்பட்டார், அவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது, எந்த ஆயுதத்தால் ஏற்பட்டது, எங்கு வைத்து ஏற்பட்டது மற்றும் எந்த நேரத்தில் ஏற்பட்டது என்ற விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அதன் அசலை நீதிமன்றத்திற்கும் மற்றொரு நகலை சம்மந்தப்பட்ட காவல்நிலையத்திற்கும், அடிக்கட்டை நாங்கள் வைத்துகொள்வோம். ஒரு காயம்பட்ட நபர் சிகிச்சைக்கு போலீஸார் மூலமாகவும், நேரடியாகவும் வரலாம். போலீஸார் மூலமாக

சிகிச்சைக்கு ஒரு நபர் வந்தால் அதற்கு போலீஸார் நமூனா வழங்குவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு நமூனாவுடன் வராமல், நேரடியாக வந்தால் நாங்கள் சம்மந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு தகவல் கொடுப்போம். காவல்நிலையத்தில் கொடுக்கும் தகவலில் விபத்து பதிவேட்டில் குறிப்பிட வேண்டிய விபரங்கள் அனைத்தும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். 2015ம் வருடத்தில் ராமகிருஷ்ணனை விபத்து சிகிச்சை பிரிவில் பார்த்த பிறகு நான் அவரை பிறகு பார்க்கவில்லை. நான் இந்த வழக்கில் காவல்துறைக்கு அனுப்ப வேண்டிய தகவல்களை அனுப்பி வைத்தேன். ராமகிருஷ்ணன் என்பவர் தன்னை ஒரு நபர் கூர்மையான பொருளால் குத்தியதாக சொன்னாதாக **அ.சா.ஆ.9** ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ராமகிருஷ்ணன் என்பவர் தன்னை ஒரு நபர் கத்தியால் குத்தியாக சொன்னதாக நான் குறிப்பிடுவது தவறு என்றும் நான் போலீஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் தன்னை தெரியாத ஒரு நபர் குத்தியாக போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால், இல்லை. என்னை போலீஸார் விசாரிக்கவில்லை. என்னுடைய **அ.சா.ஆ.9** ஆவணத்தில் மூன்று காயங்கள் குறிப்பிட்டுள்ளேன். அந்த காயங்களில் முதலாவது காயம் வெளிகாயமாகும். இரண்டு மற்றும் மூன்றாவது காயங்கள் உட்காயங்கள் என்றால் சரிதான். வயிற்று பகுதியில் உள்ள தோலுக்கு அடியில் OMENTUM படலம் உள்ளது. இலியம் என்பது சிறுகுடல் பகுதி என்று சொன்னால் சரிதான். மேற்படி OMENTUM மற்றும் இலியம் பகுதிகளில் வயிற்றில் அமிலங்களால் துளை விழுவதற்கு வாய்ப்புண்டு என்றால், சரிதான். Slicing wound என்பது ஒரு நபர் ஓடும் போதோ, விழும் போதோ, மோதிக்கும் கொள்ளும் போதோ கூர்மையான பொருளினால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். 1வது காயத்தில் கை, முன்கை, முழுக்கை என்று எழுதப்பட்டுள்ளது, அந்த முழு கை என்பது தோளில் ஆரம்பித்து கைவிரல் நுனி பகுதியில் முடிகிறது. Shoulder என்பது கையின் மேற்பகுதியில் இருந்து கழுத்து பகுதிவரை பின்புறமாக இருக்கிற பகுதியாகும். Hand என்பது மணிக்கட்டிற்கு கீழ் இருக்கிற அவயமாகும். Fore Arm என்பது

மணிகட்டிற்கும், முட்டிக்கும் இடையே உள்ள பகுதி என்றால் சரிதான். இடது பக்க கால், இடது பக்க நெஞ்சு பகுதி, கழுத்து பகுதி ஆகியவைகள் தனி தனி அவயங்களாகும். அல்நார் என்பது கையில் அல்நார் எலும்பிற்கு அருகில் உள்ளது. நான் 1வது காயத்தில் குறிப்பிட்டு வெளிக்காயங்கள் எதற்கும் அளவுகள் குறிப்பிடவில்லை. டாக்டர் சதீஸ்லால் என்பவர் 1வது காயத்தில் 1(primary repair done) என்று குறிப்பிட்டுள்ளது அவர் வழங்கிய சிகிச்சையாகும். எனக்கு மருத்துவர் சதீஸ்லாலிடமிருந்து எந்த மருத்துவ கருத்துரை எதுவும் வரவில்லை. அவர் Case Sheetல் குறிப்பிட்டுள்ளதை அடிப்படையில் நான் primary repair done என்று குறிப்பிட்டுள்ளேன். காயம் எண்.1ல் வயிற்று பகுதியில் வெளிகாயம் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால், குறிப்பிடவில்லை. நான் ராமகிருஷ்ணனுக்கு வயிற்றில் காயம் இருந்ததாக இந்த வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதுபோல் ராமகிருஷ்ணனுக்கு **அ.சா.ஆ.9** குறிப்பிட்டுள்ள இரண்டு மற்றும் மூன்று காயங்கள் ஏற்பட்டிருக்கவில்லை, நான் வழக்கிற்காக பின்னிட்டு **அ.சா.ஆ.9** ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

**நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
மதுரை.